1981 ஏப்ரல் 10]

உறுப்பினர்கள் கேட்ட காரணத்தால் கட்டிடத் தொழிலாளர்கள் நலன் குறித்து மத்திய அரசு இந்தத் தொடர் கூட்டத்திலேயே ஒரு சட்டம் கொண்டு வரலாம் என்று குறிப்பிட்டேன். ஏனெனில் அப்படிக்கொண்டு வருவதாக ஏற்கனவே சொல்லி இருக்கிறார்கள். குறைந்தபட்ச ஊதியத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு பார்த்துக்கொள்ளும்.

அம்பாசமுத்திரம் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 735, திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மன்னார்கோவில் வாகைக்குளம் கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் திட்ட வேலையில் தாமதமேற்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை. அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மன்னார் கோவில் வாகைக் குளம் குடிநீர் திட்டத்திற்கான எல்லா வேலைகளும் முடிந்து விட்டன. மின்வசதி இணைப்பு கிடைத்தவுடன் இத்திட்டம் செயல்படும்.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டது என்று சொன்னார்கள். நன்றி, ஆனால் இன்னும் எந்தவிதமான சப்ளையும் செய்யப் படவில்லை. அதற்குக் காரணம் மின்சார இணைப்பு இல்லை என்று சொல்கிறார்கள். மின்சாரம் சப்ளை செய்வதற்கான பணம் அந்த சம்பந்தப்பட்ட துறையிலிருந்து கொடுக்கப்பட்டுவிட்டது. அப்படி இருந்தும் காலதாமதம் ஆகிறது. உடனடியாக அரசு தலையிட்டு அதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, அந்தக் குடிநீர் திட்டத்திற்காகஆகின்ற மொத்த மதிப்பீடு என்ன, அதன் அடிப்படையில் அந்தப் பஞ்சாயத்து எவ்வளவு நன்கொடை தரவேண்டும் என்பதைப் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, திட்ட மதிப்பீடு 1,86,000 ரூபாய். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது குடிக்க தகுதியற்ற நீர்நிலைகள் உள்ள சிற்றூர்கள் என்று கருதுகிறேன். அப்படியானால் அது 'டைப் 2'-ல் வரும். டைப் 2-ன் கீழ் செயல்படுத்தும் திட்டத்திற்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ளும். அதோடு அவர்களுடைய எண்ணத்தை மனதிலே கொண்டு விரைவிலே மின்விசை அளிப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.